**01.03.2023 அ.வ.எண்.108/2011 வா.சா.1 ஆறுமுகம், த/பெ.முருகேசன்**

**குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் எனக் கேட்டால் சொத்து எனக்கு சொந்தம் என கேட்டு தாக்கல் செய்துள்ளேன். யார் யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் எனக் கேட்டால் லட்சுமணன், பிரபு, சரண்ராஜ் மற்றும் சாந்திக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். 60 செண்ட்டுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்து மாயானத்திற்க மேற்கிலும், வெள்ள வாய்க்காலுக்கு கிழக்கிலும், அதே புல எண்ணில் மீதி நிலத்திற்கு தெற்கிலும், சக்தி நிலத்திற்கு வடக்கிலும் உள்ளது. இந்த 4 எல்லையைத் தான் சொத்து விவரத்தில் சொல்லியுள்ளேனா எனக் கேட்டால் ஆமாம். அந்த சொத்தை சாமிநாதபிள்ளை மற்றம் அவரது மகன் வரதன் ஆகியோரிடம் வாங்கினேன். எனது கிரைய ஆவணத்தில் வேறு நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் எனது கிரைய ஆவணத்தில 88 செண்ட் வாங்கியுள்ளேன். எனவே கிரைய ஆவணத்தில் கண்ட நான்கெல்லை 88 செண்டுக்கானதாகும். வழக்கு 60 செண்டுக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தை தற்போது நான் தான் அனுபவிக்கிறேன். தற்போது பயிர் ஏதும் செய்யவில்லை. தண்ணீர் இல்லை. மழை இல்லை. வழக்கு சொத்தை நான் அனுபவிப்பதை காட்டும் வருவாய்துறை ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா எனக் கேட்டால் இல்லை. வழக்கு சொத்தை 1,2 பிரதிவாதிகள் தான் அனுபவிக்கின்றனர் என்பது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பட்டா எந்த வருடம் வழங்கப்பட்டது எனக் கேட்டால் அது விவரம் தெரியவில்லை. வழக்கு சொத்துக்கு என் பெயரில் பட்டா அடங்கல் உள்ளதா எனக் கேட்டால் உள்ளது. ஏன் அவற்றை தாக்கல் செய்யவில்லை எனக் கேட்டால் தாசில்தார்தான் கொடுக்க வேண்டும். மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது எனக் கேட்டால் லட்சுமணன் பெயரில் உள்ளதாக நினைக்கிறேன். வழக்கு தாக்கல் செய்த பிறகு 2 ஆண்டுகள் கழித்து லட்சுமணன் பெயரில் மின் இணைப்பு உள்ளதாக தெரியவந்தது. வழக்கு சொத்தில் கிணறு நான் கிரையம் வாங்கும் முன்னரே இருந்தது. அதனை குப்பிப்பிள்ளை வெட்டினார். அந்த கிணறு நீட்டக் கிணறு. ஆறு கெஜம் ஆழம் இருக்கும். கிணற்றுக்கு மின் இணைப்பு கேட்டு நான் மனு கொடுத்தேன். நான் மனுகொடுக்கவில்லை என வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அப்படி நான் சொல்லவில்லை. மின் இணைப்பு எனக்கு கிடைக்காத நிலையில் நான் எவ்விதம் கிணற்றில் நீர் இறைத்தேன் எனக் கேட்டால் குப்பிப்பிள்ளையிடம் கேட்டு அவர் அனுமதித்தால் நீர் இறைப்பேன். சாட்சியிடம் எந்த வகையில் நீர் இறைத்தீர்கள் என்ற கேள்வி முன் வைக்கப்பட்டபோது அவர் தொடர்ந்து குப்பப்பிள்ளையிடம் கேட்டு நீர் இறைத்தேன் என்று தெரிவிக்கிறார். எந்த வகையில் அவர் நீர் இறைத்தார் என்பதை அவர் தெரிவிக்க மறுப்பது போல உள்ளது. நீதிமன்றம் குறுக்கிட்டு நீர் எந்த வகையில் கிணற்றிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டது என வினவியபோது அவர் கிணற்றிலிருந்து நீர் இறைத்ததே இல்லை என்கிறார். கிணற்றில் மின் இணைப்பு பெற்ற

லட்சுமணன் தான் தொடர்ந்து நீர் இறைத்து வருகிறார் என்பதும் நான் நீர் இறைக்கவில்லை என்றும் சொன்னால் அது சரிதான். நான் கிரையம் வாங்கிய 60 செண்டுக்கு லட்சுமணன் பெயரில் பட்டா உள்ளதால் அவர் பெயருக்கு மின் இணைப்பு கொடுத்துள்ளார்கள். எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பிறகு மின் இணைப்பை துண்டிக்க கேட்டு மின்சார வாரியத்திடம் மனு கொடுத்தேன். அதற்கு கோர்ட் உத்தரவு படி மின் இணைப்பை துண்டிப்போம் என சொல்லிவிட்டார்கள். வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் மனு கொடுத்தேனா எனக் கேட்டால் ஆமாம். எனக்கு மின் இணைப்பு கேட்டு எப்போது மனு கொடுத்தேன் எனக் கேட்டால் எனக்கு மின் இணைப்பு கேட்டு நான் மனு கொடுக்கவில்லை. மின் இணைப்பை துண்டிக்க கேட்டு தான் மனு கொடுத்தேன். இதே அர்த்தத்தில் தான் முந்தைய கேள்விக்கும் பதில் அளித்தேன். 1,2 பிரதிவாதிகள் அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்பது சரிதான். அந்த பதில் அறிவிப்பில் என்ன விவரம் சொன்னேன் எனக் கேட்டால் எனது நிலத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** - ஒத்திவைக்கப்படுகிறது.